# வந்தவாசிநகராட்சி

## கூட்டஎண்.9, 2022-2023

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 3வது அட்டவணையில் 2 (3) விதியின் கீழ் இந்நகரமன்றத்தின் அவசரக் கூட்டம் 23. 03. 2023 தேதியன்று வியாழன் கிழமை காலை 11.30 மணிக்கு நகரமன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் மற்றும் நகரமன்ற துணைத்தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களும், தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருக்குறள்:-

"குழல்இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்".

விளக்கம்: தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது, யாழின் இசை இனியது என்று கூறுவர்.

### மன்றப்பொருள்

306. பிப்ரவரி -2023 மாதத்திற்கான ஆணையாளர் அவர்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

பதிவுசெய்யலாம்.

307. வந்தவாசி நகராட்சி பிப்ரவரி-2023 மாதம் பிறப்பு, இறப்பு, இறந்து பிறந்த குழந்தைகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ஆண்/பெண்- பிப்ரவரி-2023

| வ.எண். | விவரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | பிறப்பு | 0 | 1 | 1 |
| 2. | இறப்பு | 10 | 15 | 25 |
| 3. | இறந்துபிறந்தவை | 0 | 0 | 0 |

அலுவலககுறிப்பு

பதிவுசெய்யலாம்.

308. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-1, விநாயகமுதலி தெரு (விரிவு பகுதி) - சர்வே எண்.480/1481 வார்டு எண்.பி, பிளாக் எண்.5, நகரப்புல எண்.49, சுமார்-0.58, ஏக்கர்.2347.17 சதுர மீ. அளவில் ஓர் உத்தேச குடியிருப்பு மனைபிரிவு அமைக்க நகர் ஊரமைப்பு துறை, திருவண்ணாமலை அவர்களுக்கு மனு சமர்பித்ததையடுத்து, நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், திருவண்ணாமலை அவர்கள் நக.எண்.62/2022/தி.மலை, நாள்.12.04.2022-ல் சாலை வடிவமைப்பு (Road Pattern) வழங்கியுள்ளார். இதையடுத்து தேவையான ஆவணங்களை பெற்றுக்கொண்டு தார் சாலை, வடிகால்மின்சார வசதி செய்து தெருவிளக்குகள் அமைக்கப்பெற்று தான சாசனம் பெற்ற பிறகு (ஆவண எண். 2379/ 30.05.2022, 14 தாள்கள்)

வந்தவாசி நகராட்சி ஆணையாளர் பெயரில் மாற்றம் செய்து வந்தவாசி நகராட்சி மன்ற தீர்மானம் 52, நாள்.20.05.2022, மூலம் தார் சாலை, வடிகால், மின்சார வசதி செய்து தெருவிளக்குகள் அமைக்கப்பெற்றதை ஏற்கப்பட்டது. நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், திருவண்ணாமலை அவர்கள் ந.க.எண்.62/2022/தி.மலை, நாள்.10.06.2022-ல் இறுதி ஒப்புதல் அளித்து ம.வ./மா.ந.ஊ.உ.இ.((தி.மலை) எண்.158/ 2022 நாள்.10.06.2022 என்ற எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி அளித்துள்ளார். மேலும் பொது இடங்கள், மேல்நிலைத்தொட்டி, பூங்காக்கள், மின்சார கடத்தியின் புலம் (Transformer Land) ஆகிய இடங்களுக்கு கம்பிவேலி மற்றும் வருவாய் ஆவணங்களில் வந்தவாசி நகராட்சி ஆணையாளர் பெயரில் மாற்றம் செய்து வழங்க வரப்பெறப்பட்டுள்ளது. அரசாணை எண்.79/04,05,2017ன் படி கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.1000/- வீதம் 16 பிளாட்டிற்கு ரூ.16000/- மும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை 28 அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022-ல் நிபந்தனை 9,10 ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவீத மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு உரிமையாளரை சாரும் என்பதால் வைப்புத்தொகையாக 1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு என கணக்கிட்டு வசூலிக்கப்பட வேண்டும். என தெரிவித்துள்ளபடியால் பரப்பளவு 0.58 ஏக்கர் ஆக உள்ளபடியால் ரூ.100000/- ஆக மொத்தம் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.16000/- வைப்புத்தொகை ரூ.100000/-த்தை சேர்த்து ரூ.116000/-த்தை நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார்.

மேலும் பார்வை-1ல் அரசாணை நிலை எண்.79 ( வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி { UD4 (3)}) துறை நாள்.04.05.2017 தெரிவித்துள்ளதர்கிணங்க, நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், வேலூர் அவர்களின் ந.க.எண்.130/2011/வே.ம3, நாள்.14.09.2017-ல் நிலம் உபயோக மாற்றம் செய்ய ரூ.230000/- செலுத்தியுள்ளார்.

ஆகவே நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை 28, அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022 ல் தெரிவித்த நிபந்தனைன்படியும், நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், திருவண்ணாமலை அவர்கள் தெரிவித்த நிபந்தனைன்படியும் செயல்பட மனுதாரருக்கு அறிவுறித்தி, மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>அலுவலக குறிப்பு -</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 647 /2022/ந.அ.ஆ)

309. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.- 1, திருநீலகண்டபுரம் – சர்வே எண் : 427/2,427/4,வார்டு எண் : எ, பிளாக் எண் : 1 நகரப்புல எண் : 64 ,சுமார்- 1.22 ஏக்கர், 4937.16 சதுரமீ, அளவில் 38 குடியிருப்பு மனைகளுக்கான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க , நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குனர், திருவண்ணாமலை அவர்களின் நக.எண்.61HCMH8D/2022/ TVM/2022/TCP/ 2022/தி.மலை. நாள்:19.10.2022. என்ற கடிதம் வாயிலாக மேற்கண்ட புலத்தில் புதிய மனைப்பிரிவு ஏற்படுத்த சாலை மாதிரி வடிவம் (Road pattern ) வரைபடத்திற்கு,ஒப்புதல் அளித்து வரப்பெற்றுள்ளது.மேலும் மனைப்பிரிவு உரிமையாளர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவன எண் : 5249 நாள்: 14.11.2022 மூலம் மேற்படி சாலைகளையும், பொது திராவிடம்,மேல்நிலைதொட்டி, பூங்காக்கள்,மின்சார கடத்தியின் புலம் (Transformer Land) ஆகிய புலங்களை வந்தவாசி நகராட்சி ஆணையாளர் பெயரில் தான செட்டில்மென்ட் எழுதி அப்பத்திரத்தை ஒப்படை செய்துள்ளார்.

| வ.எண் | சொத்து விவரம் | செக்குபந்தி விவரம் |
|---|---|---|
| 1 | சாலைகள் | அயிட்டம் : 1 , கிழக்கு மேற்கு வடபுறம் 64.00 மீட்டர் தென்புறம் 69.10 மீட்டர் ,வடக்கு தெற்கு இருபுறமும் 9.00 மீட்டர் ,மற்றும் இதில் வடபுறம்,தென்புறம் அமைந்துள்ள மூன்று பக்கம் மூலை முடுக்குகள் 3.375 சதுர மீட்டர்ருடன் சேர்ந்து 602.30 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட கீழ்மேல் 9.00 மீட்டர் அகல மனைப்பிரிவு சாலை.<br><br>அயிட்டம் : 2 , கிழக்கு மேற்கு வடபுறம் 68.70 மீட்டர் தென்புறம் 70.00 மீட்டர் ,வடக்கு தெற்கு இருபுறமும் 7.20 மீட்டர் ,மற்றும் இதில் வடபுறம்,தென்புறம் அமைந்துள்ள மூன்று பக்கம் மூலை முடுக்குகள் 4.500 சதுர மீட்டர்ருடன் சேர்ந்து 503.82 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட கீழ்மேல் 7.20 மீட்டர் அகல மனைப்பிரிவு சாலை.<br><br>அயிட்டம் : 3 , கிழக்கு மேற்கு வடபுறம் 4.10 மீட்டர் தென்புறம் 8.00 மீட்டர் ,வடக்கு தெற்கு கிழபுரம் 3.59 மீட்டர் , மேல்புறம் 8.73 மீட்டர் மற்றும் இதில் வடபுறம் அமைந்துள்ள மூலை முடுக்குகள் போக 31.74 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட தென் - வடல் மனைப்பிரிவு சாலை.<br><br>அயிட்டம் : 4 , கிழக்கு மேற்கு வடபுறம் 45.20 மீட்டர் தென்புறம் 44.82 மீட்டர் ,வடக்கு தெற்கு இருபுறமும் 2.45 மீட்டர் 109.76 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட 2.45 மீட்டர் அகல பாதை.<br><br>அயிட்டம் : 5 , கிழக்கு மேற்கு வடபுறம் 23.00 மீட்டர் மற்றும் 2.70 மீட்டர், தென்புறம் 23.50 மீட்டர் ,வடக்கு தெற்கு இருபுறமும் 3.00 மீட்டர் மற்றும் இதில் தென்புறம் அமைந்துள்ள மூலை முடுக்குகள் 70.51 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட 7.20 மீட்டர் அகல பாதை. |

| | | |
|---|---|---|
| 2 | மேல்நிலை தொட்டி | இல்லை. |
| 3 | பூங்காக்கள் | இல்லை. |
| 4 | திரவிடங்கள்( பொது உபையோகம்) | அயிட்டம் : 1 , கிழக்கு மேற்கு வடபுறம் 4.04 மீட்டர் தென்புறம் 3.00 மீட்டர் ,வடக்கு தெற்கு கிழபுரம் 6.28 மீட்டர், வடக்கு தெற்கு மேல்புறம் 9.00 மீட்டர் இதற்க்கு 22.90 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட உள்ளாட்சி ஒதுக்கீடு பொது உபையோகம். |
| 5 | மின் கடத்தியின் இடம் (Transformer Land) | அயிட்டம் : 1 , கிழக்கு மேற்கு வடபுறம் 9.40 மீட்டர் தென்புறம் 7.00 மீட்டர் வடக்கு தெற்கு மேல்புறம் 6.28 மீட்டர் இதற்க்கு 21.90 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடம். |

மேற்படி சொத்துகளை மன்றம் நகராட்சி சொத்துபட்டியலில் சேர்த்து நகராட்சியால் பராமரித்துக்கொள்ள, அனுமதி வழங்க பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நக.எண் : 2899/ 2022 / ந.அ.ஆ**

310. வந்தவாசி நகராட்சி வார்டு எண்.5ல் சவேரியர் பாளையம், பிள்ளையார் கோயில் தெரு மற்றும் காஞ்சிபுரம் ரோடு, ஏரிகால்வாய் அருகில் JCB இயந்திரம் கொண்டு சீர்செய்யவும், கழிவுநீர் கால்வாய் மண் அகற்றவும், தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் செய்தமைக்கு செலவினம் ரூ.16,300/- மேற்கொள்ளப்பட்டது. மேற்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகரமன்ற தலைவர் அவர்களின் மு ன் அனுமதி பெற்று கால்வாய் தூர்வாரியது, JCB கொண்டு பணிகள் மேற்கொண்டது மன்றத்தின் ஒப்புதலுக்கு வைத்தல்.

(நக.எண்.077/2023/எச்1)

311. வந்தவாசி நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு சொத்துவரி, தொழில்வரி, குத்தகை இனங்கள் போன்ற வரி இனங்கள் வரி செலுத்துவோர்களுக்கு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும், வந்தவாசி நகராட்சியில் நகராட்சி கருவூலகத்தில் உரிய வரிகள் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளுமாறும் வரி செலுத்தாதவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆட்டோ மூலம் விளம்பரம் செய்வதற்கும் தோராய செலவினம் ரூ.15000/-க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவரசம் அவசியம் கருதி 2022-2023 ஆண்டிற்கு வரி மற்றும் வரியில்லா இனங்கள் செலுத்துமாறு பொதுமக்களுக்கு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்திட தோராய செலவினம் ரூ.15000/-க்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.091/2023/எச்1)

312.வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கார்த்திகை தீப திருவிழா மலைக்கோயில் பகுதியில் நடைபெற உள்ளதால் பொதுமக்கள் செல்லும் பாதையில் ஒயிட் போக்கஸ் லைட்டுகளை அமைத்துக் கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.13000/-க்கு மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கார்த்திகை தீபதிருவிழா முன்னிட்டு 06.12.2022 அன்று மலைக்கோயிலுக்கு பொதுமக்கள் செல்வதற்கு ஒயிட்போக்கஸ் லைட்டுகள் அமைத்ததற்கு தோராய செலவினம் ரூ. 13000/- மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.090/2023/எச்1)

313. வந்தவாசி நகராட்சி எச்சூர் குப்பைக்கிடங்கில் பையோமைனிங் முறையில் குப்பைகளை பிரிக்கும் பணிகள் மற்றும் Material Recavary Facility Buildings (MRF) கட்டுமான பணிகள் மேற்கொள்ள மும்முனை இணைப்பு தேவைப்படுவதாலும் மும்முனை இணைப்பிற்குண்டான மின் உபகரணங்களை கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.20000/- மேற்படி பணிக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரிடவும், விலைப்புள்ளி கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1.ராசி எலக்ட்ரிகல்ஸ் மதிப்பீட்டை விட குறைவு.
2நவின் எலக்ட்ரி கல்ஸ் மதிப்பீட்டை விட அதிகம்
3.தமிழ்நாடு எலக்ட்ரிகல்ஸ் மதிப்பீட்டை விட அதிகம்

மேற்படி பணிக்கு 13.02.2023 அன்று குறைந்த விலைப்புள்ளி கோரிய ராசி எலக்ட்ரிகல்ஸ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மின் உபகரணங்களை கொள்முதல் செய்ப்பட்டதற்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.541/2022/இ1)

314. வந்தவாசி நகராட்சியின் வார்டு எண்.15ல் உள்ள பொது கழிப்பிடம் பொதுமக்கள் மற்றும் வியாபார மக்கள் பயன்படுத்தியதால் நச்சுதொட்டி (Septic Tank) நிரம்பி உள்ளதால் பொதுமக்கள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதியும் அவசர அவசியத்தை முன்னிட்டு, நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நச்சுதொட்டியினை (Septic Tank) சுத்தம் செய்யப்பட்டதற்கு ரூ.10,000/- செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவரசம் அவசியம் கருதி நிர்வாக நலன் கருதி நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நச்சு தொட்டியினை சுத்தம் செய்யப்பட்டது செலவினம் ரூ.10,000/-க்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.093/2023/எச்1)

315. திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை வருகை தரும் மாண்புமிகு. நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் மற்றும் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் ஆகியோர் வருகை புரிவதை வரவேற்க, அருணை எக்ஸ்பிரஸ் நாளிதழ் வரவேற்றது குறித்து விளம்பர கட்டணம் ரூ.15,750/-ஐ அருணை எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நிர்வாக நலன் கருதி விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ.15750/-ஐ அருணை எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு வழங்கிட மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.093/2023/எச்1)

316. வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் சுகாதார பணிகள் மேற்கொள்ள போதிய நிரந்தர தூய்மை பணியாளர்கள் இல்லாமையால் அரசு ஆணை எண்.101, நாள்.30.04.1997 படி இந்நகராட்சிக்கு சுமார் 89 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக முறையில் அமர்த்தி கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.K.Dis No.32976/J3/2018 நாள்.4.1.2019-ன்படி SB&CO சென்னை அவர்களுக்கு ஆட்களை சப்ளை செய்ய வேலைக்கான பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இதன்படி கடந்த 31.05.2022-ல் மேற்கண்ட நிறுவனத்தாரின் ஒப்பந்த பணிக்காலம் மூன்று ஆண்டுகள் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21789/2021/EA2/ 2.10.2021ன் படி வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு உரிய வழிமுறையாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி கோரி 18.05.2022-ல் கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் 17.08.2022 மற்றும் 23.09.2022 நாட்களில் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இது நாள் வரை அனுமதி வரப்பெறாமையால் நிர்வாக அனுமதி வரப்பெறும் வரையில் மேற்படி நிறுவனத்தாரே தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் தினக்கூலி அடிப்படையில் பணி நீட்டிப்பு மேற்கொள்ளவும் இதற்கு இடையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து உரிய நிர்வாக அனுமதி வரப்பெற்று புதிய ஒப்பந்ததாரர் தேர்வு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டு அவர் பணி

மேற்கொள்வதற்கு முதல் நாளுடன் SB&CO சென்னை நிறுவனத்தாரின் பணி நீட்டிப்பு ஆணை இரத்து செய்யப்படும் என்ற கூடுதல் நிபந்தனையுடன் SB&CO சென்னை என்ற நிறுவனத்திற்கு 01.01.2023 முதல்31.03.2023 முடிய மூன்று மாதத்திற்கு பணி நீடிப்பு வழங்கிடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது. மேலும் நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஜனவரி -2023 -ம் மாதத்திற்கு தொகை ரூ.11,97,105/- வழங்கியமைக்கும், பிப்ரவரி -2023 -க்கான மாதத்திற்கு தொகை ரூ.10,69,705/- வழங்கியமைக்கும், மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2063/2022/எச்1, நாள்.12.09.2022)

317. வந்தவாசி நகராட்சியின் 2022-2023 -ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2023-2024-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை (Budget) உத்தேச வரவு, செலவு, மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் பதிவு செய்து அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.094/2023/எச்1)

318. வந்தவாசி நகராட்சி 1, 2, 3 வது வார்டு மக்கள் பயன்படுத்திவரும் சுடுகாட்டிற்கு காட்டு நாயக்கன் தெருவின் முடிவில் இருந்து வந்தவாசி A ஏரிக்கரை வழியாக சுடுகாட்டிற்கு செல்லும் பாதை சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் நகராட்சி மூலம் தார்சாலை போடப்பட்டது. அதன் பிறகு அந்த சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் போக வர வழியின்றி மிகவும் சிரமமாக உள்ளது. மேற்படி இடம் பொதுப்பணித்துறை (நீர்பாசனம்) கட்டுப்பாட்டில் உள்ளதாலும் அந்த பகுதியில் உள்ள பழுதடைந்த சாலையினை உடனடியாக புதிய தார்சாலை அமைப்பதற்கு பொதுப்பணி துறையின் மூலம் நகராட்சிக்கு அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 514 /2022/இ1)

319. வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனம் TN25/T/6143-ன் வாகனத்தினை Insurance காலம் 24.03.2023 உடன் முடிவடைவதால் அதனை Insurance காலம் புதுப்பிக்க 25.03.2023 முதல் புதுப்பிக்க கட்டணம் ரூ.21966/- United India Insurance Company Limited, வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தும் வாகனம் TN25/T/6143-ன் காலம் 24.03.2023 உடன் முடிவடைவதால் 25.03.2023 முதல் புதுப்பிக்க கட்டணம் ரூ.21966/- செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 094 /2023/எச்1)

320. வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனம் TN25/U/7978-ன் வாகனத்தினை Insurance காலம் 24.03.2023 உடன் முடிவடைவதால் அதனை Insurance காலம் புதுப்பிக்க 25.03.2023 முதல் புதுப்பிக்க கட்டணம் ரூ.14369/- United India Insurance Company Limited, வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தும் வாகனம் TN25/U/7978-ன் காலம் 24.03.2023 உடன் முடிவடைவதால் 25.03.2023 முதல் புதுப்பிக்க கட்டணம் ரூ.14369/- செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 094 /2023/எச்1)

321. வந்தவாசி நகராட்சி Amrut 2-0 திட்டத்தின் கீழ் குளம் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்.139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.29.12.2021 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. பார்வை -2ல் காணும் அரசாணை நிலை எண்.7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.01.2023 அன்று வந்தவாசி நகராட்சி வார்டு எண்.23ல் உள்ள நரஹரிராயர் குளத்தினை சீரமைக்கும் பணி ரூ.51.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கிணங்க மேற்படி பணிக்கு தொழில் நுட்ப அனுமதி வேண்டி திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. திரு.P. இளங்கோவன் மதிப்பீட்டைவிட (0.021% சதவீதம் ) குறைவு.

2.திரு.S.வீரராகவன் மதிப்பீட்டைவிட (0.028% சதவீதம் ) அதிகம்

இதில் மதிப்பீட்டுத் தொகையை விட குறைந்த விலைப்புள்ளியை வழங்கிய திரு.P. இளங்கோவன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.795/2022/இ1)

322. வந்தவாசி நகராட்சி Amrut-2.0 திட்டத்தின் கீழ் பூங்கா பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்.139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.29.12.2021 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. பார்வை -2ல் காணும் அரசாணை நிலை எண்.7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.01.2023 அன்று வந்தவாசி நகராட்சி வார்டு எண்.14, கே.வி.டி.நகர் விரிவு சர்வே எண்.521/4, 532, பூங்கா அமைத்தல் பணி ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதற்கிணங்க மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வேண்டி திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. திரு.P. இளங்கோவன் மதிப்பீட்டைவிட (0.11 % சதவீதம் ) குறைவு.

2. திரு.S.வீரராகவன் மதிப்பீட்டைவிட (0.17 % சதவீதம் ) அதிகம்

இதில் மதிப்பீட்டுத் தொகையை விட குறைந்த விலைப்புள்ளியை வழங்கிய திரு.P. இளங்கோவன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.795/2022/இ1)

323.வந்தவாசி நகராட்சி வார்டு - 22 அப்பாவு முதலி தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க மக்களின் நீண்டகால கோரிக்கையாகும். அப்பகுதி வழக்கு தொடரப்பட்டு இருந்தது. தற்போது அரசு வழக்கறிஞர் மூலம் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளதாலும், மேற்படி அரசு வழக்கறிஞரின் ஆலோசனையின்படி, மக்கள் பயன் பெறும் வகையில் அப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண். **514/2022/இ1)**

H. Jem 23.3.2024

நகரமன்றதலைவர்

வந்தவாசி நகராட்சி.